Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349


# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி


KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, ஜூலை 24, 2024 | இதழ் 102

## பட்ஜெட்டில் எதிர்க்கட்சி மாநிலங்களுக்கு பாரபட்சமா? இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம்

## நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கடும் அமளி! எந்த மாநிலமும் புறக்கணிக்கப்படவில்லை: நிர்மலா சீதாராமன் பதிலடி

சென்னை, 24.ஜூலை 2024: மத்திய பட்ஜெட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவையில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இன்று கடும் அமளியில் ஈடுபட்டனர், மாநிலங்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

2024 25ம் நிதியாண்டுக்கான முழு பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று மக்களவையில் தாக்கல் செய்தார். இந்த பட்ஜெட்டில் ஆந்திராவிற்கு ரூ.15,000 கோடியையும் பீகார் மாநிலத்திற்கு ரூ.26,000 கோடியையும் ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும் பாஜக கூட்டணியில் உள்ள கட்சிகள் ஆளும் பீகார், ஆந்திராவுக்கு பட்ஜெட்டில் அதிக அறிவிப்புகள் இடம்பெற்றன. இதனிடையே பட்ஜெட்டில் பீகார், ஆந்திராவை தவிர மற்ற மாநிலங்களில் போதிய அறிவிப்புகள் வெளியாகவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. மேலும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் பட்ஜெட்டில் புறக்கணிக்கப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டினர்.

இந்த நிலையில் மாநிலங்களவையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று காலை பட்ஜெட்டை விவாதத்துக்கு முன்வைத்தபோது, சில மாநிலங்களுக்கு அதிக நிதியும், பல மாநிலங்களுக்கு நிதியே ஒதுக்கவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டினார்.

தொடர்ந்து, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள், பட்ஜெட்டில் புறக்கணிக்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்டுள்ளது, நாற்காலியை காப்பாற்றுவதற்கான பட்ஜெட்டாகவே அமைந்துள்ளதாக கார்கே பேசியதால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது.

இதற்கு நிர்மலா சீதாராமன் விளக்கம் அளிக்க முன்வந்தபோது, அவரது பேச்சை புறக்கணித்து எதிர்க்கட்சிகள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.




இதனைத் தொடர்ந்து பேசிய நிர்மலா சீதாராமன், அனைத்து மாநிலங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. எந்தவொரு மாநிலத்தையும் நாங்கள் புறக்கணிக்கவில்லை. மத்திய பட்ஜெட்டில் ஒவ்வொரு மாநிலத்தின் பெயரையும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

நான் மகாராஷ்டிராவைக் குறிப்பிடவில்லை. ஆனால், அந்த மாநிலத்தின் ரூ. 76,000 கோடி மதிப்பிலான துறைமுக திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளோம். பெயர் குறிப்பிடாததால் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதாகக் கூற முடியாது.

செலவுக் கணக்கில் திட்டங்கள் வாரியாக நிதி ஒதுக்கீடு குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றும், அந்த மாநிலங்களுக்கு எதுவும் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் கூறுவது அரசாங்கத்தை கேவலப்படுத்தும் காங்கிரசின் திட்டமிட்ட முயற்சி. இது ஒரு மூர்க்கத்தனமான குற்றச்சாட்டு.

காங்கிரஸ் ஆட்சிக் கால நிதி அமைச்சர்கள் தங்கள் பட்ஜெட் உரையின் போது அனைத்து மாநிலங்களின் பெயர்களையும் குறிப்பிட்டார்களா? இதற்கு முன்பு ஆட்சி செய்து பல பட்ஜெட்களை தாக்கல் செய்த காங்கிரஸ் இதை புரிந்து கொள்ள வேண்டும்" என தெரிவித்தார்.

அதேபோல், மக்களவை கேள்வி நேரத்தின் போது பட்ஜெட்டுக்கு எதிராக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டதால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது.

மத்திய பட்ஜெட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தியா கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் முன்னதாக இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டெல்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இல்லத்தில் நேற்று இரவு நடைபெற்ற இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் கூட்டத்தில் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. அதேபோல் ஜூலை 27ம் தேதி பிரதமர் தலைமையில் நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தை இந்தியா கூட்டணி ஆட்சி செய்யும் மாநில முதல்வர்கள் புறக்கணிக்க உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மத்திய பட்ஜெட்டில் பாரபட்சம் காட்டப்படுவதாக கூறி, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தி, சமாஜவாதி தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

மேலும் காங்கிரஸ், தி.மு.க., சமாஜ்வாதி, ஆம் ஆத்மி, சிவசேனை (உத்தவ் அணி), திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் பதாகைகளுடன் முழக்கமிட்டனர்.

தமிழ்நாடும் இல்லை.. திருக்குறளும் இல்லை, தமிழகத்துக்கு நிதி எங்கே? போன்ற பதாகைகளுடன் தமிழகத்தை சேர்ந்த எம்.பி.க்கள் போராட்டத்தில் பங்கேற்றனர்.

## பட்ஜெட்டில் சுங்க வரி குறைப்பு எதிரொலி தங்கம் விலை 2வது நாளாக வீழ்ச்சி: ஒரு பவுன் இன்று ரூ.480 குறைந்தது

சென்னை, 24.ஜூலை 2024: மத்திய பட்ஜெட்டில் தங்கத்தின் மீதான இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளதன் எதிரொலியாக, தங்கம் விலை தொடர்ந்து 2வது நாளாக இன்றும் குறைந்துள்ளது.

சமீப காலமாக தங்கத்தின் விலை கடுமையான ஏற்றத்தைக் கண்டுவந்தது. மிக அதிகபட்சமாக ஒரு சவரன் தங்கம் ரூ.55,240 வரை அதிகரித்து விற்பனையானது. தங்கம் விலை அதிகரித்து வருவதைக் கண்டு நகை வியாபாரிகளும், நகை வாங்குவோரும் கவலை அடைந்தனர். இந்நிலையில், மத்திய அரசு நேற்று தாக்கல் செய்த பட்ஜெட்டில் தங்கத்தின் மீதான இறக்குமதி வரியை 15 சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக குறைத்தது. இதனை நகை வியாபாரிகள் வரவேற்றுள்ளனர். இந்த வரி குறைப்பு மூலம், வியாபாரிகளுக்கு தங்கம் விற்பனை அதிகரிக்கும். அத்துடன், பொதுமக்களும் தங்கம் வாங்குவதோடு, தங்கத்தில் முதலீடு செய்யவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என வியாபாரிகள் கருத்து தெரிவித்தனர். இந்த விலை சரிவு மேலும் கணிசமான அளவுவரை நீடிக்கலாம் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று பட்ஜெட்டில் தங்கத்தின் மீதான வரி குறைப்பு அறிவிப்பு வெளியான உடனேயே, தங்கம் கிராம் ஒன்றுக்கு ரூ.275 குறைந்து ரூ.6,550-க்கும், சவரனுக்கு ரூ.2,200 குறைந்து ரூ.52,400-க்கும் விற்பனையானது. இந்நிலையில் தொடர்ந்து 2-வது நாளாக இன்றும் தங்கம் விலை குறைந்துள்ளது வியாபாரிகள், நடுத்தர மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையில் இன்று ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.60 குறைந்து ஒரு கிராம் ரூ.6490க்கு விற்பனையாகிறது. அதன்படி, சவரனுக்கு ரூ.480 குறைந்து ஒரு பவுன் ரூ.51,920க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளியின் விலையும் கிராமுக்கு 50 காசுகள் குறைந்து ஒரு கிராம் ரூ.92க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ பார் வெள்ளியின் விலை ரூ.92,000 ஆக உள்ளது.








PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

புதன்கிழமை,
ஜூலை 24, 2024

# நாட்டை வளர்ச்சியின் புதிய உயரத்துக்கு கொண்டு செல்லும் பட்ஜெட்: மோடி பாராட்டு



சென்னை, 24.ஜூலை 2024: நாட்டை வளர்ச்சியின் புதிய உயரத்துக்கு இட்டுச்செல்லும் பட்ஜெட் என பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, பிரதமர் மோடி தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர் பட்ஜெட்டுக்கு பாராட்டு தெரிவித்தார்.

2024 -2025 பட்ஜெட், கிராமங்கள், ஏழைகள், விவசாயிகள் ஆகியோரை வளமையான பாதைக்கு அழைத்துச் செல்லும். புதிய நடுத்தர மக்களுக்கு அதிகாரம் அளிக்கும் தொடர் நடவடிக்கையாக இந்த பட்ஜெட்டை பார்க்கலாம். இளைஞர்களுக்கு எண்ணற்ற புதிய வாய்ப்புகளை அளிக்கும்.

நாட்டை வளர்ச்சியின் புதிய உயரத்துக்கு இட்டுச்செல்லும், இந்த முக்கியமான பட்ஜெட்டுக்காக நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகத்தின் ஒவ்வொரு தரப்பினருக்கும் அதிகாரம் அளிக்கும் தொலைநோக்கு பார்வை கொண்ட பட்ஜெட்டாக திகழ்கிறது. அனைவருக்கும் ஒளிமயமான எதிர்காலத்துக்கு பாதை அமைக்கும்.

கல்வி, திறன் மேம்பாடு ஆகியவற்றுக்கு புதிய உயரம் அளிக்கும். நடுத்தர வர்த்தகத்துக்கு புதிய பலம் அளிக்கும். பழங்குடியினர், தலித், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு அதிகாரம் அளிக்கும் வலிமையான திட்டங்களை கொண்டுள்ளது.

பெண்களுக்கு பொருளாதார பங்களிப்பை உறுதிப்படுத்துகிறது. மத்திய நிதி மந்திரிக்கும், அவரது குழுவுக்கும் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதேபோல் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, ராணுவ அமைச்சர் ராஜ்நாத்சிங், சால போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரி ஆகியோரும் பட்ஜெட்டுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

# கருத்துக்கணிப்பில் கமலா ஹாரீஸ் முன்னிலை; டொனால்ட் டிரம்ப் அதிர்ச்சி

சென்னை, 24.ஜூலை 2024: அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்பை விட ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளரான கமலா ஹாரிஸ் முன்னிலையில் இருப்பதாக ராய்ட்டர்ஸ் கருத்து கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நவம்பர் மாதம் 5-ஆம் தேதி அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. ஆனால், அமெரிக்க அரசியலில் அடுத்தடுத்த பரபரப்பு சம்பவங்கள் நடந்தவண்ணம் உள்ளன. ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய அதிபர் ஜோ பைடனும், குடியரசுக் கட்சி சார்பில் அதிகாரப்பூர்வ வேட்பாளராக முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்பும் களத்தில் இருந்தனர். இதில் தொடர்ச்சியாக நடந்த சம்பவங்கள், முன்னாள் அதிபர் டிரம்பிற்கு ஆதரவாக பார்க்கப்பட்டன.

டிரம்ப் பைடன் கலந்துகொண்ட விவாத நிகழ்ச்சியில் பைடனின் தடுமாற்றம், டிரம்ப் மீது நடந்த துப்பாக்கிச் சூடு, மறதியில் வேறொரு பெண்ணை மனைவி என நினைத்து பைடன் முத்தம் கொடுக்க முயன்றது. பைடன் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டது என அடுத்தடுத்த சம்பவங்கள் நிகழ்ந்தன. பைடனுக்கு தனிப்பட்ட முறையில் நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாம் அவரது வயது முதிர்வின் காரணமாகவே ஏற்பட்டது என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து கிடையாது.

இதில் அதிகமான விமர்சனங்களை எதிர்கொண்டது டிரம்ப் உடனான விவாதத்தில் பைடன் தடுமாறியதற்குத்தான். இதன் காரணமாக அவரது சொந்தக் கட்சிக்குள்ளேயே அதிருப்தி எழுந்தது. ஜனநாயகக் கட்சியினர் பலர் பைடனை போட்டியிடுவதில் இருந்து விலகிக் கொள்ளுமாறு அறிவுறுத்தினர். விவாதத்திற்கு முன் வந்த கருத்துக் கணிப்புகள் டிரம்ப் மற்றும் பைடன் என இருவருக்கும் சமமான வாய்ப்புகள் இருப்பதை வெளிப்படுத்திய நிலையில், விவாதத்திற்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் பைடனிற்கு சரிவைக் காட்டின.

இந்நிலையில்தான், தான் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்தார் பைடன். 1968 ஆம் ஆண்டுக்குப் பின், அதிபராக இருக்கும் ஒருவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடவில்லை என அறிவித்தது இதுவே முதல்முறை. அதுமட்டுமின்றி இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸை அதிபர் வேட்பாளராகவும் முன்மொழிந்தார். இந்த நிலையில், குடியரசுக் கட்சியின் டொனால்ட் டிரம்பை விட ஜனநாயக கட்சியின் வேட்பாளர் கமலா ஹாரிஸ் இரண்டு சதவீதம் அதிகமான புள்ளிகள் முன்னிலை பெற்றுள்ளதாக ராய்ட்டர்ஸ்/இப்சோஸ் கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக கடந்த வார வாக்கெடுப்பில் டிரம்பிற்கு எதிராக போட்டியில் பைடன் இரண்டு-புள்ளி குறைவாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பட்ஜெட்டில் எந்தவிதமான திட்டங்களையும் அறிவிக்கவில்லை
# தமிழகத்தின் மீது மத்திய அரசுக்கு காழ்ப்புணர்ச்சி: எடப்பாடி பழனிச்சாமி



சென்னை, 24.ஜூலை 2024: தமிழகத்துக்கு மத்திய பட்ஜெட்டில் எந்த திட்டங்களும் அறிவிக்கப்படாதது, தமிழகத்தின் மீது மத்திய அரசுக்கு உள்ள காழ்ப்புணர்ச்சியை காட்டுகிறது என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

2024- 2025 ம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு எந்தவிதமான புதிய திட்டங்களும் அறிவிக்கப்படாதது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

மத்திய நிதி அமைச்சர் நேற்று 2024 -2025 ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார். அதன் முன்னெடுப்பாக 22 ந் தேதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்த 2023 - 2024 ம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வு அறிக்கையில், நடப்பு நிதி ஆண்டில் 6.5 முதல் 7 சதவீதம் வரை நிலையான விலை விகிதப்படி (சிஷீஸீஉ மீணீஸீமீ ஜீகூஷீ வீநீமீஉ) பொருளாதார வளர்ச்சி விகிதம் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 8.2 சதவீதத்தைவிட குறைவாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ஆய்வு அறிக்கையின்படி வேலை வாய்ப்பை உருவாக்குதல், திறன் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்தல், வேளாண்துறை மேம்பாடு, செயற்கை நுண்ணறிவு மூலம் தொய்வடைந்துள்ள தொழில்நுட்பத் துறையை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் ஒருசில அம்சங்கள் உள்ளன.

தற்போதைய அறிவிப்புகள் மூலம் விவசாயிகள் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்காது.

அடுத்ததாக, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்குதல் மற்றும் அவர்களை தொழில் துறையில் தேவைப்படும் வேலைவாய்ப்புகளுக்கு தயார்படுத்துதல் போன்றவற்றில் ஒருசில அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதுதவிர, திறன் மேம்பாட்டிற்கான முயற்சிகள், சிறு, குறு தொழில்களுக்கு கடன் வழங்குவதில் சில சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

ஆனால், கள அளவில் இந்த உதவிகளைப் பெறுவதில் பல சிரமங்கள் உள்ளன. எனவே, திறன் பயிற்சி வழங்குவதிலும், சிறு, குறு தொழில்களுக்கு கடன் வழங்குவதிலும் உள்ள செயல்முறை ரீதியிலான பிரச்சனைகளைத் தீர்க்க வழிவகை காண வேண்டும் என்பதே என்னுடைய கருத்து.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கணிசமான நிதியை ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த நிதியின் பெரும் பகுதி தற்போது ஆட்சியிலுள்ள அரசின் கூட்டணிக் கட்சிகள் ஆட்சி செய்யும் பீகார், ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கு தொழில் வழிப்பாதை, சாலை கட்டமைப்பு மேம்பாடு, புது விமான நிலையங்கள், மருத்துவக் கல்லூரிகள், புதிய மின் திட்டங்கள், ஆந்திர பிரதேசத்திற்கு புதிய தலைநகருக்கான திட்டம், நீர் ஆதார திட்டங்கள் என பல திட்டங்களுக்கு குறிப்பிட்ட மாநிலங்களுக்கு மட்டும் சலுகைகளை வழங்கியிருப்பது, மத்திய அரசின் பாரபட்சமான நிலையைக் காட்டுகிறது.

கோதாவரி- காவிரி இணைப்பு போன்ற திட்டங்கள் தமிழகத்தினால் முன்மொழிந்த போதிலும், மத்திய அரசு இதனை கண்டுகொள்ளாமல் விட்டது, தமிழக விவசாயிகளுக்கு பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது.

அதேபோல், இதே மத்திய அரசு அறிவித்த ஓசூர், கோயம்புத்தூர் பாதுகாப்பு தளவாடங்கள் தொழில்வழி திட்டமும் அறிவிப்பு செய்ததோடு கிடப்பில் போடப்பட்டுள்ளதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், நடந்தாய் வாழி காவிரி திட்டம் (காவிரியை தூய்மைப்படுத்தும் திட்டம்) பற்றி ஜனாதிபதி அறிவிப்பில் அறிவித்ததோடு, இத்திட்டத்திற்கு தேவையான நிதியினை ஒதுக்காமல் தமிழகத்திற்கு மத்திய அரசு பாரபட்சம் காட்டியுள்ளது.

வெள்ளத் தடுப்பு பணிகளுக்கும் பீகார், அசாம், இமாச்சல் பிரதேசம், உத்திரகாண்ட், சிக்கிம் போன்ற மாநிலங்களுக்கே பெருந்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இது போன்ற திட்டங்கள் எதுவும் தமிழகத்திற்கு அறிவிக்கப்படாதது ஒரு பெருத்த ஏமாற்றமாகும்.

எப்போதும் செயல்படுத்துகிற ஊரக வளர்ச்சி திட்டங்கள், நகர்புற மேம்பாட்டு திட்டங்கள் போன்றவை அறிவிக்கப்பட்டுள்ளன. பல அறிவிப்புகள் வரி சீர்திருத்தம் போன்றவை அறிவிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் செயல்படுத்தி எந்த அளவுக்கு வரி விதிப்பு முறைகள் எளிமைப்படுத்தப்படும் என்பதையும், அதனால் வரி செலுத்துவோரின் சிரமங்கள் குறைகிறதா என்பதையும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த தருணத்தில் ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு முறை கொண்டு வந்த பின்பும், தொழில் முனைவோர் பல்வேறு நடைமுறை சிரமங்களைத் தொடர்ந்து சந்தித்து வருகின்றனர் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வரி விதிப்பைப் பொறுத்தவரை, சுங்க வரி விதிப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனால் உள்நாட்டு உற்பத்தித் திறனும், போட்டியிடும் திறனும் அதிகரிக்கும் என கூறப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

எனினும் நேரடி வரி விதிப்பில், புதிய வரி விதிப்பு முறையைப் பின்பற்றுவோருக்கு மட்டும் ஆண்டுக்கு ரூ. 17,500 சேமிக்கக்கூடிய அளவில் வரி விகிதத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது இன்றைய சூழ்நிலையில் போதுமானதாக இல்லை என்பது என்னுடைய கருத்து. இதனால் வரி விதிப்பில் மாற்றம் வரும் என்று எதிர்பார்த்திருந்த பொதுமக்கள் மத்தியில் இது ஒரு பெருத்த ஏமாற்றமே.

இதுதவிர, பங்குச் சந்தை வரிவிதிப்பு முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

பொதுவாக, கார்ப்பரேட்டுகள் அதிக லாபம் ஈட்டுகின்றனர் என்று பொருளாதார ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டிருந்தும் அந்த அதிக லாபத்தை, வேலைவாய்ப்பு உருவாக்குவதில் அவர்கள் இதுவரை பயன்படுத்தவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை ஊக்குவிப்பதற்கான எந்த அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை.

எனவே, தனியார் துறை மூலம் அதிக வேலைவாய்ப்பை உருவாக்குவது என்பது எந்த அளவு சாத்தியம் என்று தெரியவில்லை.

மத்தியில் ஆட்சி செய்யும் பா.ஜ.க.-வின் நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் அளித்த பல வாக்குறுதிகள் இந்த வரவு, செலவுத் திட்ட அறிக்கையில் இடம்பெறவில்லை என்பது மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இந்த வரவு, செலவு அறிக்கையில் முதியவர்களுக்கான எந்த சலுகைகளும் அறிவிக்கப்படவில்லை. முதியோர்களுக்கு கொரோனா காலத்திற்கு முன்பு நடைமுறையில் இருந்த சலுகைகளையாவது திரும்ப அளித்திருக்கலாம்.

எனவே, இந்த வரவு, செலவு அறிக்கை வடமாநிலங்களையும், பா.ஜ.க.-வின் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களையும் திருப்திபடுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதே தவிர, ஒட்டுமொத்த இந்தியத் திருநாட்டின் பொருளாதார வளர்ச்சியை சமநிலையோடு ஊக்குவிக்கக்கூடிய அறிக்கையாக இது இல்லை.

குறிப்பாக தமிழகத்திற்கு எந்தவிதமான திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை என்பது, தமிழகத்தின் மீது மத்திய அரசுக்கு உள்ள காழ்ப்புணர்ச்சியையே காட்டுகிறது. தமிழகத்திற்கு ஏதாவது நன்மை கிடைக்கும் என்று தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சியினருக்கு வாக்களித்து, 39 நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழக மக்கள் வெற்றிபெறச் செய்தார்கள். தி.மு.க. - கூட்டணிக் கட்சிகளுக்கு 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும், தமிழகத்திற்கு எந்த ஒரு திட்டத்தையும் பெற்றுத் தராதது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது. தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.-க்கள் நாடாளுமன்றத்தில் 2019 முதல் 2024 ம் ஆண்டுவரை தமிழகத்தின் நன்மைக்காக எந்த முயற்சியையும் மேற்கொள்ளாமல் இருந்தது போல், அமைதியாக காலம் தள்ளுவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmail.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி



# பிரசாந்த் நடிக்கும் 'அந்தகன்' படத்தில் இருந்து 'அந்தகன் ஆந்தம்' ப்ரமோ பாடல் வெளியீடு 'அந்தகன்' ரீமேக் அல்ல ரீமேட் படம்: தியாகராஜன்




சென்னை, 24 ஜூலை 2024: 'டாப் ஸ்டார்' பிரசாந்த் கதையின் நாயகனாக முதன்மையான கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் 'அந்தகன் - தி பியானிஸ்ட்' திரைப்படத்தினை ரசிகர்களிடத்தில் பிரபலப்படுத்தும் வகையில் இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இசையில், இசையமைப்பாளரும், பின்னணி பாடகருமான அனிருத் மற்றும் 'மக்கள் செல்வன்' விஜய் சேதுபதி ஆகியோர் பின்னணி பாட, 'அந்தகன் ஆந்தம்' எனும் ப்ரமோ பாடல் தயாராகி இருக்கிறது. இந்த பாடலின் உள்ளடக்கத்தை உருவாக்கி, காட்சிப்படுத்தியிருக்கிறார் 'நடன புயல்' பிரபுதேவா. இந்த பாடலை தளபதி விஜய் வெளியிட்டு, பட குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்திருக்கிறார். இதைத் தொடர்ந்து இந்தப் பாடலை அறிமுகப்படுத்தும் நிகழ்வு சென்னையில் நடைபெற்றது. இதன்போது இயக்குநர் தியாகராஜன், நடிகர் பிரசாந்த், இயக்குநர் - நடிகர் கே .எஸ். ரவிக்குமார், நடிகை ஊர்வசி, நடிகை பிரியா ஆனந்த், நடிகை வனிதா விஜயகுமார், நடிகர்கள் பூவையார், பெசன்ட் ரவி, ஆதேஷ் பாலா, மோகன் வைத்யா, ஒளிப்பதிவாளர் ரவி யாதவ், சோனி மியூசிக் நிறுவனத்தின் தென் மண்டல தலைவர் அசோக் பர்வானி மற்றும் படக்குழுவினர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் படத்தின் இயக்குநரான தியாகராஜன் பேசுகையில், "2019ம் ஆண்டில் பலத்த போட்டிகளுக்கு இடையே இந்தியில் வெளியான 'அந்தாதூன்' படத்தின் தமிழ் உரிமையை வாங்கினேன். தமிழ் திரையுலகில் பெரிய பெரிய நட்சத்திர நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் என பலரும் இப்படத்தின் தமிழ் உரிமையை வாங்குவதற்கு போட்டியிட்டார்கள். இந்தப் படத்தை ஏன் வாங்க வேண்டும் என தோன்றியது என்றால், அதில் ஒரு பார்வை திறன் சவால் உள்ள மாற்றுத்திறனாளி தான் கதையின் நாயகன். அவன் ஒரு பியானோ வாசிக்கும் இசை கலைஞன். பிரசாந்த் சிறிய வயதிலிருந்து பியானோ வாசிப்பான், லண்டன் டிரினிட்டி இசைக்கல்லூரியில் பியானோ இசையில் நான்காவது கிரேடில் தேர்ச்சி பெற்றிருக்கிறான். அவனுக்கு இந்த கதை மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நினைத்து தான் இதன் தமிழ் உரிமையை வாங்கினேன். படத்தை வாங்கிய பிறகு கொரோனாவால் இரண்டு ஆண்டு காலம் சென்றது.□ அதன் பிறகு இடர்பாடுகள் ஏற்பட்டதன. அதனைத் தொடர்ந்து நான் படத்தை இயக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன். ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் பொருத்தமான நட்சத்திர நடிகர்களை தேர்வு செய்தோம். குறிப்பாக இதில் ஒரு டாக்டர் கேரக்டர் இருக்கிறது. அந்த கேரக்டருக்கு இயக்குநரும், நடிகருமான கே. எஸ். ரவிக்குமார் தான் பொருத்தமாக இருப்பார் என்று அவரை தொடர்பு கொண்டு பேசினேன். அவரும் கதையைக் கேட்டவுடன் நடிக்க ஒப்புக்கொண்டார். படத்தில் அவருடைய பங்களிப்பு அதிகம். திறமையான நடிப்பால் அந்த கதாபாத்திரத்தை அவர் மெருகேற்றி இருக்கிறார். நடிகை பிரியா ஆனந்த் அழகான பெண். இந்த படத்தில் அவரை இளமையாகவும், அழகாகவும் காட்சிப்படுத்தி இருக்கிறோம்.□ லண்டனின் வீதிகளில் அவர் நடந்து செல்லும் ஸ்டைலும், அவரின் அவுட்லுக்கும் அனைவரும் ரசிக்கக் கூடியதாக இருக்கும். நடிகை சிம்ரனும் இந்தப் படத்தில் ஒரு முக்கிய வேடத்தில் நடித்திருக்கிறார். சற்று எதிர்மறையான கதாபாத்திரம் என்றாலும் திறமையான நடிப்பால் அந்த கதாபாத்திரத்தை உயிர்ப்பித்திருக்கிறார். அவருடைய சிறந்த நடிப்பிற்காக இந்த வருடம் அவருக்கு நிச்சயம் விருது கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அடுத்ததாக வனிதா விஜயகுமார் - அவருடைய நடிப்புக்கு தீனி போடும் வகையில் பொருத்தமான கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். கார்த்திக் பழம்பெரும் நடிகர் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். 'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் தொடங்கிய அவருடனான நட்பு இன்றும் தொடர்கிறது. படப்பிடிப்பு தளத்திற்கு காலை எட்டு மணிக்கு வருகை தந்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தி இருக்கிறார். அவருடைய தொடக்க காலகட்டத்தில் நடித்த துள்ளலான நடிப்பை இப்படத்தில் காணலாம். அதேபோல் படத்தில் இடம்பெறும் சிறிய கதாபாத்திரத்திற்கு கூட பொருத்தமான நட்சத்திர நடிகர்களை தேர்வு செய்து நடிக்க வைத்திருக்கிறோம். சமுத்திரக்கனி, பூவையார், மோகன் வைத்யா, ஆதேஷ் பாலா என பலரும் நடித்திருக்கிறார்கள். இவர்களைத் தொடர்ந்து நடிகர் யோகி பாபு முக்கிய வேடத்தில் நடித்திருக்கிறார். மிகவும் பரபரப்பாக நடித்துக் கொண்டிருக்கும் யோகி பாபு இந்த படத்திற்காக வழங்கிய ஒத்துழைப்பும் மறக்க முடியாதது. யோகி பாபுவுக்கு சகோதரியாக ஊர்வசி நடித்திருக்கிறார். ஊர்வசி என்னுடன் சில திரைப்படங்களில் ஜோடியாக நடித்திருக்கிறார். பிரசாந்த் நடித்த 'மன்னவா' படத்திலும் நடித்திருக்கிறார். இப்படத்தின் ஒரிஜினலில் ஊர்வசி கதாபாத்திரம் இருக்கிறது.□ ஆனால் தமிழில் அந்த கதாபாத்திரம் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அது ரசிகர்களுக்கு புதிய அனுபவத்தை வழங்கும் ஊர்வசி- யோகி பாபு- கே எஸ் ரவிக்குமார்- பிரசாந்த் ஆகியோர் இணைந்து நடித்திருக்கிறார்கள். அந்த காட்சிகள் எல்லாம் ரசிகர்களை உற்சாகமாக்கும். பிரசாந்த் நடித்த 'செம்பருத்தி', 'காதல் கவிதை' ஆகிய படங்களில் பணியாற்றிய ரவி யாதவ் இந்த திரைப்படத்தில் ஒளிப்பதிவாளராக பணியாற்றி இருக்கிறார். லண்டனில் இருந்த ரவி யாதவ் நான் அழைத்தவுடன் மகிழ்ச்சியுடன் சம்மதித்து இந்த படத்தில் பணியாற்றியிருக்கிறார். கலை இயக்குநர் செந்தில் ராகவன், ஒலி வடிவமைப்பாளர் லட்சுமி நாராயணன் என அவரவர் துறையில் மிகுந்த தேர்ச்சி பெற்ற கலைஞர்களை ஒருங்கிணைத்து இப்படத்தை உருவாக்கி இருக்கிறோம். இந்தி பதிப்பில் இல்லாத பல விஷயங்களை தமிழ் ரசிகர்களை மனதில் வைத்து இணைத்திருக்கிறோம். அதனால் அந்தகன் ரீமேக் படம் அல்ல ரீமேட் படம். அதாவது மறு உருவாக்கம் செய்யப்பட்ட படைப்பு. அந்தகன் திரைப்படம் ரசிகர்களுக்காக புதுமையாகவும், நேர்த்தியாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படத்தின் உச்சகட்ட காட்சி பெரும் விவாதத்தை ஏற்படுத்தும்.□ இது ரசிகர்களை மீண்டும் திரையரங்கத்திற்கு வரவழைக்கும் வகையில் அமைந்திருக்கிறது.□ இந்தத் திரைப்படம் வெளியான பிறகு இந்தியில் வெளியான அந்தாதூன் திரைப்படத்திற்கும், தமிழில் வெளியாகி இருக்கும் அந்தகன் படத்திற்கும் இடையேயான வித்தியாசத்தை உணர்வீர்கள்.□ இந்தியில் இல்லாத பல விஷயங்களை நாங்கள் முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கியிருக்கிறோம்.□ அதிலும் அந்தகன் திரைப்படம் பிரசாந்தின் ஐம்பதாவது திரைப்படம் என்பதால் கூடுதல் முக்கியத்துவம் வழங்கியிருக்கிறோம். இந்தத் திரைப்படத்தை ஆகஸ்ட் மாதத்தில் வெளியிட திட்டமிட்டிருக்கிறோம்,," என்றார். இயக்குநர் - நடிகர் கே.எஸ். ரவிக்குமார் பேசுகையில், "மிகவும் சந்தோஷமான நிகழ்வு இது. தியாகராஜன் சாரை என்னுடைய கல்லூரி பருவ நாட்களில் இருந்தே பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் ஒரு ஏற்றுமதியாளராக இருந்தேன். அவரும் ஒரு ஏற்றுமதியாளராக இருந்தார். அந்த வகையில் அவர் மீது ஒரு ஈடுபாடு எனக்கு இருந்தது. அவர் நடித்த, தயாரித்த திரைப்படங்களை பார்த்திருக்கிறேன். நான் இயக்கி, நடித்த திரைப்படங்களை அவரும் பார்த்திருக்கிறார். இப்படி தொழில் முறையிலான நட்புதான் எங்களுக்குள் இருந்தது.

இந்தத் தருணத்தில் 'அந்தகன்' படத்தில் நடிக்க தியாகராஜன் அழைப்பு விடுத்தார். அவர் மீது இருந்த அன்பின் காரணமாக நடிக்க ஒப்புக்கொண்டேன். அதன் பிறகு இந்தி படத்தினை பார்த்தேன். பிரமாதமான படைப்பு. அதனை சாதாரணமாக ரீமேக் செய்தாலே வெற்றி கிடைக்கும். ஆனால் தியாகராஜன் சார் அப்படத்திற்கு நட்சத்திர நடிகர்கள், பிரம்மாண்டமான தயாரிப்பு என பல விஷயங்களை கவனித்து, கடினமாக உழைத்து உருவாக்கியிருக்கிறார். படத்திற்காக சிறிய சமரசம் செய்து கொள்ளாமல் நேர்த்தியாக உருவாக்கினார். படப்பிடிப்பு தளத்தில் அவர் பயன்படுத்திய மானிட்டர் கூட பிரம்மாண்டமாக இருக்கும். அப்போதே அவருடைய ஈடுபாடு நன்கு தெரிந்தது . இப்படத்தில் நடித்த நடிகர் நடிகைகள் தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள். பிரசாந்த்திற்கு அந்தகன் ஐம்பதாவது படம் என்பது இங்கு வந்த பிறகுதான் எனக்கு தெரியும். பிரசாந்த் நூறு படங்களை தொட வேண்டும் என வாழ்த்துகிறேன். கண்டிப்பாக அவர் அதனை தொடுவார். பார்ப்பதற்கு ஆஜானுபாகுவான தோற்றம் இருந்தாலும் அவருக்கு குழந்தை மனசு. இந்தத் திரைப்படத்தில் நடிப்பதற்கு முன்பே ஏராளமான திரைப்பட விழாக்களில் அவரை சந்தித்து இருக்கிறேன். நான் 'புரியாத புதிர்' படத்தினை இயக்கிக் கொண்டிருக்கும்போது, அந்தப் பட தயாரிப்பு நிறுவனத்தின் அருகில் உள்ள வளாகத்தில் தான் தயாரிப்பாளர் அன்பாலயா பிரபாகரனின் அலுவலகம் இருந்தது. நான் நான்கு படங்களை இயக்கி விட்டு, அன்பாலயா பிரபாகரனுக்காக 'பொண்டாட்டி ராஜ்ஜியம்' எனும் படத்தை இயக்க ஒப்புக்கொண்ட போது பிரசாந்த் பிசியான முன்னணி நடிகராகிவிட்டார். அந்த கால கட்டத்தில வெளிநாடுகளில் கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றால்.. முதலில் பிரசாந்தை ஒப்பந்தம் செய்யுங்கள் என்று தான் விழா குழுவினர் கோரிக்கை வைப்பார்கள். அந்த அளவிற்கு பிரசாந்த்திற்கு உலக நாடுகளில் ரசிகர்களும், ரசிகைகளும் இருக்கிறார்கள்.□ இந்த படத்தில் நடிகை ஊர்வசி நடித்திருக்கிறார். அவருக்கு ஊர்வசி என்று பெயர் வைப்பதற்கு பதிலாக ராட்சசி என்று பெயர் வைத்திருக்கலாம், அந்த அளவிற்கு திறமையான நடிகை. இந்த படம் பிரம்மாண்டமாக இருக்கும். நன்றாகவும் இருக்கும். இந்த படத்தை பார்க்கும் ரசிகர்கள்..□ படம் பார்த்துவிட்டு வீட்டிற்கு சென்ற பிறகும் அவர்களில் மனதில் நிற்கும் படமாக இது இருக்கும், இருக்க வேண்டும் என வாழ்த்துகிறேன். 'அத்தகன் ஆந்தம்' பாடலை ஒரு முறை கேட்கும்போதே மனதில் பதிந்து விடுகிறது. இந்த ப்ரமோ பாடல் மட்டுமல்லாமல், படமும் பெரிய வெற்றி பெற வாழ்த்துகிறேன்," என்றார்.

நடிகை வனிதா விஜயகுமார் பேசுகையில், "இன்றைய நாள் எனக்கு மிகவும் உணர்வுபூர்வமான நாள்.□ என்னுடைய திரையுலக பயணத்தில் மிக முக்கியமான படம் இது. இந்தத் திரைப்படத்தில் அற்புதமான ஒரு வேடம் கிடைத்திருக்கிறது அதில் திறமையாக நடித்திருக்கிறேன். இதனால் எனக்கு பல வாய்ப்புகள் கிடைக்கும் என்பதால் இதனை குறிப்பிடவில்லை. இது என் குடும்பம். என்னுடைய வாழ்க்கையில் மிகச்சிறந்த வழிகாட்டி தியாகராஜன் சார். இன்றும் அவரை நான் நேசிக்கிறேன். பிரசாந்த் எனக்கு புதியவரல்ல.□ நான் 90களில் பள்ளிகளில் படித்துக் கொண்டிருக்கும் போதே அவர் மீது எனக்கு கிரஷ் இருந்தது. என்னுடைய முதல் டீன் ஏஜ் கிரஷ் பிரசாந்த் தான். அவருடன் கடந்த சில வருடங்களாக பழகும் போது அன்பான நட்பு கிடைத்தது.□ அந்த நட்பு அழகானது. மதிப்பு வாய்ந்தது. பிரசாந்த் சிறந்த மனிதர். அவரை நினைத்து நான் மிகவும் பெருமிதம் அடைகிறேன். அவருடைய நேர்மை , பெருந்தன்மை, அர்ப்பணிப்பு, கடும் உழைப்பு என எல்லாமே அவருடைய தந்தையிடம் இருந்து அவர் கற்றுக் கொண்டிருக்கிறார். அவர் எப்போதும், 'இவர் (தியாகராஜன்) போன்ற ஒரு அப்பா இருந்தால் அதுவே போதும் ' என்பார்.

இந்த திரைப்படம் தரமான படைப்பு. அருமையான நட்சத்திர கலைஞர்கள், திறமை வாய்ந்த தொழில்நுட்ப கலைஞர்கள் ஆகியோரின் கூட்டணியில் உருவாகி இருக்கிறது. இந்தப் படைப்பை விளம்பரப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கூட எனக்கு இல்லை. ஏனென்றால் இந்த திரைப்படம் அதுவாகவே விளம்பரத்தை தேடிக் கொள்ளும். ரசிகர்களிடம் இந்தத் திரைப்படம் எளிதாக தானாகவே சென்றடையும்.□ இந்தத் திரைப்படம் மிகப்பெரிய அளவில் வெற்றி பெறும்.□ ஒரு ரசிகையாக இந்தியில் வெளியான அந்தாதுன் திரைப்படத்தையும் பார்த்திருக்கிறேன். அந்த படத்தின் வேற்று மொழி ரீமேக்கையும் பார்த்திருக்கிறேன். ஆனால் தியாகராஜன் சார் தமிழில் மிகப் பெரும் நட்சத்திர பலத்துடன் இந்த திரைப்படத்தை உருவாக்கி இருக்கிறார்.□ இந்த திரைப்படத்தில் பணியாற்றும் போது படப்பிடிப்பு தளத்தில் பணிகளை நிறைவு செய்தவுடன் தியாகராஜன் சார் அன்றைய சம்பளத்தை அன்றே கொடுத்து விடுவார். படத்திற்கு பின்னணி பேசும் போது இரண்டு மடங்கு சம்பளத்தை கொடுத்தார். அவரிடம் பணம் இருக்கிறது என்பதற்காக கொடுக்கவில்லை. ஒரு நட்சத்திரத்தின் மதிப்பை அறிந்து அதனை கவுரவப்படுத்தும் விதமாக அது இருந்தது. நான் ஒரு பயணத்தின் போது என்னுடைய செல்போனை தொலைத்து விட்டேன். அப்போது தியாகராஜன் சார் தொடர்பு கொண்டார். நான் பதட்டத்தில் இருப்பதை உணர்ந்து, உடனடியாக நீ எங்கு இருக்கிறாய் என கேட்டார். உடனடியாக எனக்கு ஒரு விலை உயர்ந்த செல்போனை பரிசாக அளித்தார், அதுதான் தியாகராஜன் சார்," என்றார். நடிகை பிரியா ஆனந்த் பேசுகையில், "இங்கு வந்த பிறகுதான் தமிழில் பணியாற்றி நீண்ட நாள் ஆகிவிட்டது என்ற உணர்வு எழுகிறது. இந்த ஒட்டுமொத்த படக்குழுவில் இயக்குநர் தியாகராஜன் என்னுடைய நண்பர் என்று தான் சொல்வேன். இந்த படத்தில் நடித்த நடிகர்கள் அனைவரும் தியாகராஜன் மீது வைத்திருக்கும் அன்பின் காரணமாகத்தான் நடிக்க ஒப்புக் கொண்டார்கள். அனைவரும் பிரசாந்த் மீதும் அளவற்ற அன்பு வைத்திருந்தார்கள்.□ ஏராளமான சக கலைஞர்களுடன் பணியாற்றி இருக்கிறேன். ஆனால் அனைவரை காட்டிலும் பிரசாந்த் தனித்துவமிக்கவர். அவருக்கு சினிமா மீதான பற்றும், தேடலும் அதிகம். இந்த திரைப்படத்திற்கு வி எஃப் எக்ஸ் காட்சிகளை மேற்பார்வையிட்டது பிரசாந்த் தான். சினிமாவில் அறிமுகமாகும் அனைத்து நவீன தொழில்நுட்பங்களை பற்றியும் அவர் அறிந்து வைத்திருக்கிறார். இந்தப் படத்தில் பணியாற்றி இங்கு வந்து நிற்கும் போது தான் தாய் வீட்டிற்கு வந்த மகிழ்ச்சி கிடைத்திருக்கிறது," என்றார். நடிகர் பிரசாந்த் பேசுகையில், ''இந்த அந்தகன் ஆந்தம் பாடலை வெளியிட்ட தளபதி விஜய்க்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கேட்டதும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டு, இதற்காக நேரம் ஒதுக்கி, இந்த பாடலை வெளியிட்டதற்காக அவருக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பாட்டை உருவாக்கிய பிரபு தேவாவிற்கும், நடனம் அமைத்த சாண்டி மாஸ்டருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பாடலில் பங்களிப்பு செய்த அனிருத் மற்றும் விஜய் சேதுபதி ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு படத்திற்கான ப்ரோமோ பாடலை இந்த அளவு பிரம்மாண்டமாக உருவாக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இதிலும் நட்சத்திர கலைஞர்களை இடம்பெறவைத்து, அனைவரும் ரசிக்கும் வகையிலும், அனைவருக்கும் பிடிக்கும் வகையிலும் கடினமாக உழைத்து உருவாக்கியிருக்கிறோம். இந்தப் படத்தில் இடம்பெறும் ஒவ்வொரு சிறிய கதாபாத்திரங்களுக்கும் நட்சத்திர கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு நடித்திருக்கிறார்கள். இயக்குநர் தியாகராஜன் இந்த விஷயத்தில் நுட்பமாக கவனித்து திறம்பட செயல்பட்டு இருக்கிறார்.□ கார்த்திக் சார், கே எஸ். ரவிக்குமார் சார், ஊர்வசி மேடம், சமுத்திரகனி சார், மனோபாலா சார், யோகி பாபு சார், பூவையார், ஆதேஷ் பாலா, வனிதா விஜயகுமார், செம்மலர் அன்னம் என ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் பொருத்தமான கலைஞர்கள் நடித்திருக்கிறார்கள். அனைவரும் அப்பா அழைத்தவுடன் அவர் மீது வைத்திருந்த அன்பின் காரணமாக படபிடிப்பு தளத்திற்கு வருகை தந்து முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்கள். அப்பா மீது இன்றளவும் குறையாத மதிப்பு மரியாதை வைத்திருக்கும் அனைத்து கலைஞர்களுக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நடிகர்கள் மட்டுமல்லாமல் தொழில்நுட்ப கலைஞர்களும் திறமையானவர்களே இணைந்து பணியாற்றினார்கள்.□ ஒளிப்பதிவாளர் ரவி யாதவ் கடுமையாக உழைத்து ஒவ்வொரு காட்சியையும் பிரம்மாண்டமாகவும், நேர்த்தியாகவும் உருவாக்கி இருக்கிறார்.இந்தப் படம் பிரம்மாண்டமாக இருக்கிறது என அனைவரும் சொல்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் ஒளிப்பதிவாளர் ரவி யாதவ் தான். இதற்காக அவருக்கு இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்தோஷ் நாராயணனின் இசை, சதீஷ் சூர்யாவின் படத்தொகுப்பு, செந்தில் ராகவனின் கலை இயக்கம் என ஒவ்வொரு தொழில்நுட்ப கலைஞரும் தங்களின் முழுமையான திறமையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.□ இந்தப் படத்தில் இடம்பெறும் 'என் காதலே...' எனும் பாடலை டான்ஸ் மாஸ்டர் கலா ஆறு மணி நேரத்திலேயே நடனம் அமைத்து ஆச்சரியப்படுத்தினார்.□ இந்தப் படத்தில் அப்பா எந்த வகையான காட்சிகளை திரையில் காட்சிப்படுத்த வேண்டும் என்று நினைத்தாரோ அதற்காக அனைவரும் உழைத்தனர். இந்தப் படம் மிகவும் நன்றாக இருக்கிறது. ரசிகர்கள் திரையரங்கத்தில் இந்த படத்தை பார்க்கும் போது ஆனந்தம் அடைவார்கள். மகிழ்ச்சி அடைவார்கள். அந்த தருணத்திற்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன். இந்த தருணத்தில் இன்றளவும் என் மீது அன்பும், பாசமும் காட்டும் ரசிகர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்," என்றார். நடிகை ஊர்வசி பேசுகையில், ''தியாகராஜன் சார் மிலிட்டரி மேன் மாதிரி அனைத்தும் நேரத்திற்கு ஏற்றபடி சரியாக நடக்க வேண்டும் என நினைப்பார்.□ 1984ம் ஆண்டில் தியாகராஜன் சார் தயாரித்த திரைப்படம் 'கொம்பேறி மூக்கன்' அதில் நான் அவருக்கு ஜோடியாக நடித்திருக்கிறேன். அந்தப் படத்தில் சரிதாவும் நடித்திருந்தார். அன்றிலிருந்து ஆரம்பித்த அந்த மரியாதைக்குரிய அன்பும், நட்பும் இன்றும் தொடர்கிறது. பிரசாந்துடன் நான் 'தமிழ்' படத்தில் நடித்திருக்கிறேன். அவரும் எனக்கு நல்ல நண்பர். 'மன்னவா' படத்திலும் நடித்திருக்கிறேன். இந்த இருவருக்கும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் தொடர்பு கொண்டு உதவி கேட்டால் அடுத்த நிமிடம் எனக்காக வந்து நிற்பார்கள்.□ அந்தகன் நல்ல படம். நம்முடைய மண்ணிற்கு என்ன தேவையோ அந்த மாற்றங்களை செய்துதான் இந்த படத்தை தியாகராஜன் உருவாக்கியிருக்கிறார். இந்தப் படத்தில் அமைந்திருக்கும் நட்சத்திர கூட்டணி போல் வேறு எந்த படத்திலும் அமைந்திருக்காது., அமைந்ததும் இல்லை. இந்த படம் நன்றாக ஓட வேண்டும், ஓடும் என நம்புகிறேன் அனைவரும் வாழ்த்துங்கள்," என்றார்.

## சிறப்பு நாகரிக ஆடை பிராண்டான பிக் ஹலோ இப்போது சென்னையில் இரண்டு சில்லறை விற்பனைக் கடைகளைக் கொண்டுள்ளது



சென்னை, 24.ஜூலை 2024: பிளஸ் சைஸ் ஆட்களுக்கு சிறப்பு நாகரிக ஆடை பிராண்டான பிக் ஹலோ, சமீபத்தில் சென்னையில் தனது இரண்டாவது சில்லறை விற்பனை நிலையத்தைத் திறந்துள்ளது. சென்னையின் சிட்டி சென்டர் மற்றும் பாண்டி பஜாரில் உள்ள பிக் ஹலோ கடைகள் நகரின் பிளஸ் சைஸ் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நாகரிகமான மற்றும் உயர்தர ஆடைகள் மற்றும் அணிகலன்களை வழங்குகின்றன. அந்த பிராண்டு வரவிருக்கும் மாதங்களில் சென்னையிலும், தமிழ்நாட்டின் பிற முக்கிய நகரங்களிலும் கூடுதல் கடைகளைத் திறக்கத் திட்டமிட்டுள்ளது.

சென்னையில் உள்ள இரண்டு கடைகளும் 'அனுபவ கடைகள்' என வடிவமைக்கப்பட்டுள்ளன மற்றும் உற்சாகமான உள்ளக அமைப்புகளும் நடனமாடும் உருவப் பொம்மைககளும் சிறந்த மற்றும் ஈர்க்கும் வாடிக்கையாளர் சேவையும் கொண்டுள்ளன, இவை பிராண்டின் உற்சாகமான மற்றும் மகிழ்ச்சியான மனப்பான்மையை பிரதிபலிக்கின்றன. பிக் ஹலோ இந்தியாவில் வாடிக்கையாளர்கள் வசதியாக உட்கார்ந்து பொருட்களை வாங்ககூடிய தனித்துவமான லவுஞ்சை வழங்கும் முதல் பிராண்டாகும், இது அவர்களின் சில்லறை விற்பனை அனுபவத்தை மேம்படுத்துகிறது.

இந்த தொடக்கத்துடன், சென்னை, பெங்களூர், ஹைதராபாத், விஜயவாடா மற்றும் குண்டூர் ஆகிய இடங்களில் மொத்தம் 18 இடங்களில் பிக் ஹலோ தனது சில்லறை கடையை விரிவுபடுத்தியுள்ளது. இந்த பிராண்டு மேலும் ஒரு மின் வணிகக் கடையையும் இயக்குகிறது மற்றும் விரைவில் சென்னையில் மேலும் கடைகளைத் திறக்கத் திட்டமிட்டுள்ளது. பிக் ஹலோ விஷ்ணு பிரசாத் நிறுவிய வேகமாக வளர்ந்து வரும் நாகரிக ஆடை சில்லறை விற்பனை நிறுவனமான அப்சலூட் பிராண்ட்ஸ் மற்றும் ரீடெய்ல் பிரைவேட் லிமிடெட் (ஏ பி ஆர் பி எல்) க்கு சொந்தமானது.

அப்சலூட் பிராண்ட்ஸின் பிராண்ட் தலைவரான மோடிதா திரிபாதி கூறுகையில், "சென்னையின் நுண்ணறிவு மிக்க நாகரிக வாடிக்கையாளருக்குப் பிக் ஹலோவின் நாகரிகமான மற்றும் எல்லோருக்கும் பொருத்தமான ஆடைகள் மற்றும் அணிகலன்களை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மிகுந்த உற்சாகத்தில் இருக்கிறோம். எங்கள் முதல் இரண்டு கடைகள் உள்ளூர் மக்களுக்கு பிக் ஹலோவின் பொருத்தமான, நாகரிகமான மற்றும் கவனமாக வடிவமைக்கப்பட்ட ஆடைகளை எளிதாக அணுக உதவுகின்றன, அவர்கள் தங்கள் தனித்துவத்தை மற்றும் அடையாளத்தை தடையின்றி தைரியமாக வெளிப்படுத்த முடியும் என்றார்."

பிக் ஹலோ ஆண்கள் மற்றும் பெண்களுக்கு மேற்கத்திய மற்றும் இந்திய பாரம்பரிய ஆடைகளை வழங்குகிறது. ஒவ்வொரு உடல் வகை, சந்தர்ப்பம், மனநிலை மற்றும் தருணத்திற்கும் ஏற்ற சரியான மற்றும் உயர் தொழில்நுட்ப பொருத்தம் மற்றும் முடிவுகளுடன் ஆடைகள் வழங்கப்படுகின்றன. இந்த வரம்பில் சட்டைகள், டி-ஷர்ட்கள், பேண்ட்கள், ஜீன்ஸ், சினோஸ், ஷார்ட்ஸ், பிளேசர்கள், குர்தாக்கள், பாரம்பரிய கீழாடைகள் மற்றும் பந்த்கலாவுகள் உள்ளன. இந்த பிராண்ட் பெல்ட்கள், வயிற்று கட்டுப்படுத்திகள், ஸ்கார்ஃப்கள், தாவணி, பாக்கெட் ஸ்கொயர்கள் மற்றும் சஸ்பெண்டர்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான ஆபரணங்களையும் வழங்குகிறது.

சிறப்பு நாகரிக ஆடை பிராண்டான இது, இந்த நிதியாண்டில் நாடு முழுவதும் சில்லறை விற்பனை விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக 50 புதிய கடைகளைத் திறக்க இலக்காகக் கொண்டுள்ளது. இந்த கடைகளில் பெரும்பான்மை தமிழ்நாடு, தெலங்கானா, ஆந்திர பிரதேசம், கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் அமைந்திருக்கும். அபசலூட் பிராண்ட்ஸ் அண்ட் ரிடெயில் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் சி ஈ ஓ திரு. பிரசாத் கூறுகையில், "இந்தியா முழுவதும் பிளஸ் சைஸ் ஃபேஷனுக்கு செல்லும் இடமாக பிக் ஹலோவை உருவாக்குகிறோம். இந்த பிராண்ட், பிளஸ் சைஸ் உடல்களின் தனித்துவமான வளைவுகளுக்கும் வடிவங்களுக்கும் ஏற்றவாறு அழகாக வடிவமைக்கப்பட்ட நாகரிமான, உயர்தர ஆடைகளை வழங்குகிறது."

இந்தியாவில் பிளஸ் சைஸ் ஃபேஷன் ஆடை சந்தையின் மதிப்பீடு ரூ.88,000 கோடி ஆகும், இது மொத்த ஃபேஷன் சந்தையில் 12% பங்கைக் கொண்டுள்ளது. இதில், ஒழுங்கமைக்கப்பட்ட சந்தையின் பங்கு சுமார் ரூ.29,000 கோடி அல்லது 33% என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த சந்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25% சி ஏ ஜி ஆர் ஆக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## எஸ் எம் ஈ வளர்ச்சியை மேம்படுத்தும் சூழல் அமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்தும் கோட்டக் மஹிந்திரா வங்கி



சென்னை, 24 ஜூலை 2024: கோட்டக் மஹிந்திரா வங்கி, தென் பிராந்தியத்தை அதற்கான வளர்ந்து வரும் வாய்ப்பாக அங்கீகரித்து, தமிழகத்தில் தனது எஸ் எம் ஈ வணிகத்தை விரிவுபடுத்தவுள்ளது. எஸ் எம் ஈ பிரிவின் தலைவர், சேகர் பண்டாரி, "கோட்டக்கில் எஸ் எம் ஈ வங்கியியல் என்பது நிதியுதவி மட்டுமல்ல, ஒட்டுமொத்த சுற்றுச்சூழலை உருவாக்குவதும், அவர்களின் வளர்ச்சிப் பயணத்தில் பங்காளிப்பதும் ஆகும்" என்று வலியுறுத்தினார். வங்கியானது "கோட்டக் ஐ ஐ டி மெட்ராஸ் சேவ் எனர்ஜி மிஷன்"க்காக ஐ ஐ டி மெட்ராஸுடன் இணைந்துள்ளது, இது பல்வேறு வகையான ஆற்றல் மதிப்பீட்டு சேவைகளை வழங்குவதன் மூலம் எஸ் எம் ஈபிரிவில் ஆற்றல் செயல்திறனை செயல்படுத்தும் முதன்மை நோக்கத்துடன் உற்பத்தித் துறையை எரிசக்தி சேமிப்பு மற்றும் தயாரிப்பின் மூலம் கார்பன் நீக்கல் செய்கிறது. அதன் மூலம், எஸ் எம் ஈகளை திறமையானவையாகவும், செலவு குறைந்தவையாகவும் மற்றும் நிலையானவையாகவும் மாற்றுகிறது. இந்தத் திட்டம் இதுவரை 23 வெவ்வேறு உற்பத்தித் துறைகளில் உள்ள 161 எஸ் எம் ஈ களுக்கு விரிவான ஆற்றல் தணிக்கைகளை நடத்தியுள்ளது, இதன் விளைவாக வருடாந்திர ஆற்றல் செலவு சேமிப்பு ரூ. 123 கோடி*. 19% எஸ் எம் ஈ கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவை ஜவுளி மற்றும் பொறியியல் துறைகளைச் சேர்ந்தவை, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் பிராந்தியத்தில் உள்ள எஸ் எம் ஈ களை ஆதரிப்பதில் கோட்டக்கின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றன.

கோட்டக் மஹிந்திரா வங்கியின் எஸ் எம் ஈ பிரிவின் தலைவர் சேகர் பண்டாரி செய்தியாளர்களிடம் பேசுகையில், "எஸ் எம் ஈக்கள் எங்கள் வளர்ச்சி உத்தியில் ஒருங்கிணைந்தவை, மேலும் எஸ் எம் ஈ வளர்ச்சிக்கான எங்கள் பார்வையில் தென் பிராந்தியத்துடன் தமிழ்நாடும் மையமாக உள்ளது. பிராந்தியத்தில் உள்ள எஸ் எம் ஈக்களிடையே நிலைத்தன்மை மற்றும் ஆற்றல் செயல்திறனை ஆதரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இதன் விளைவாக செலவுகள் மிச்சமாகும். கோட்டக்கின் எஸ் எம் ஈ வங்கியானது வர்த்தகம், சேகரிப்புகள், செயல்பாட்டு மூலதன மேலாண்மை, எஸ்டேட் திட்டமிடல், செல்வம் மற்றும் சம்பளம் ஆகியவற்றில் விரிவான நிலையான தீர்வுகளை வழங்குவதாகும், இதன் மூலம் அவர்களின் வளர்ச்சிக்கு உதவும் ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் அமைப்பையும் உருவாக்குகிறது" என்று கூறினார்.

கோட்டக் மஹிந்திரா வங்கியைப் பொறுத்தவரை, தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வளர்ச்சி திறன் கொண்ட ஒரு முக்கிய சந்தையாகும், மேலும் உள்ளூர் நுண்ணறிவு மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தி சென்னை, கோயம்புத்தூர், திருப்பூர், சேலம் மற்றும் ஈரோடு போன்ற முக்கிய இடங்களை வங்கி அடையாளம் கண்டுள்ளது. தற்போது, வங்கி 47 இடங்களில் 114 கிளைகளைக் கொண்டுள்ளது, இதை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

*சேமிப்பின் ஒரு பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் "செலவு சேமிப்பு பரிந்துரைகளாகும்" மற்றும் உண்மையான சேமிப்பு அல்ல என்பதை நினைவில் கொள்ளவும். உண்மையான சேமிப்பு பரிந்துரையை செயல்படுத்தப்படுவதைப் பொறுத்தது. தற்போது பரிந்துரைக்கப்பட்ட சேமிப்பில் ~20% எட்டப்பட்டுள்ளது.

## பணமோசடி வழக்கு: சவுக்கு சங்கருக்கு ஜாமீன்

சென்னை, 24.ஜூலை 2024: பணமோசடி வழக்கில் யூடியூபர் சவுக்கு சங்கருக்கு ஜாமீன் வழங்கி, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெண் காவலர்கள் மற்றும் தமிழ்நாடு காவல்துறையினர் குறித்து அவதூறாகப் பேசியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் கடந்த மே 4ஆம் தேதி கோவை போலீசாரால் தேனியில் வைத்து கைது செய்யப்பட்டார். இதுதவிர, காரில் கஞ்சா வைத்திருந்ததாக தேனி போலீசாரும் வழக்குப்பதிவு செய்தனர்.

அது மட்டுமல்லாமல், மே 12 அன்று, அப்போதைய சென்னை காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவின் பேரில் சவுக்கு சங்கர் மீது குண்டர் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. மேலும், இவர் மீது சென்னை காவல்துறையின் மத்திய குற்றப்பிரிவில் மட்டும் 7 வழக்குகள் உள்ளன. அவற்றில் 3 வழக்குகள் மீது விசாரணை நடத்தப்படுகிறது. இரண்டு வழக்குகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள வழக்குகள் நிலுவையில் உள்ளது.

இதனிடையே, சவுக்கு சங்கரின் தாயார் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டதற்கு எதிராகவும், சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள ஆட்கொண்டர்வு மனுவை உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கவும் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். இந்த நிலையில், இது தொடர்பான வழக்கு இன்று நீதிபதிகள் சுதான்சு துலியா மற்றும் அஷானுதீன் அமானுல்லா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, சவுக்கு சங்கருக்கு இந்த வழக்கில் இடைக்கால ஜாமீன் வழங்கி உத்தரவு பிறப்பித்தனர். சவுக்கு சங்கர் தரப்பில் இந்த வழக்கில் ஏற்கெனவே ஜாமீன் கோரப்பட்ட நிலையில், இன்று அவருக்கு ஜாமின் வழங்கி நீதிபதி பரத்குமார் உத்தரவிட்டுள்ளார்.

## நேபாளத்தில் விமானம் ஓடுபாதையிலேயே விழுந்து நொறுங்கியது: 18 பேர் பலி



சென்னை, 24.ஜூலை 2024: நேபாளத்தின் காத்மாண்டு விமான நிலையத்தில் இருந்து 19 பேருடன் புறப்பட்ட விமானம் சில விநாடிகளிலேயே ஓடுபாதையில் விழுந்து நொறுங்கியது. விமானம் தீப்பற்றி எரிய அதிலிருந்த பயணிகள் 18 பேரும் உயிரிழந்தனர்.

விபத்தில் சிக்கிய விமானத்தின் விமானி சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான விமானம் சவுர்யா ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமானது.

காத்மாண்டுவில் இருந்து போக்காரா என்ற ரிசார்ட் நகருக்கு இந்த விமானம் இன்று காலை புறப்பட்ட போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விமானம் ரன்வேயில் வேகமாக சென்று மேலே எழும்ப முயன்ற போது (டேக்ஆப்) திடீரென சறுக்கிய விமானம், விமான நிலையத்தை ஒட்டி உள்ள காலியிடத்தில் விழுந்து நொறுங்கியது. விழுந்தவுடன் விமானத்தில் தீ பிடித்து எரிந்துள்ளது.

இதனால் விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உடனடியாக விமான நிலையத்தில் இருந்த தீயணைப்புப் படை வீரர்கள், மீட்பு குழுவினர் விரைந்து சென்று தீ அணைத்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 18 பேர் உயிரிழந்ததாக தெரிவித்து, அவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டு வருகிறது.

தொடர்ந்து போலீசார் மற்றும் தீயணைப்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேபாளத்தில் விமான விபத்து அவ்வப்போது ஏற்படுகிறது. கடந்த ஆண்டு ஜனவரியில் ஏற்பட்ட விமான விபத்தில் 5 இந்தியர்கள் உட்பட 68 பேர் உயிரிழந்தனர்.

## இலங்கை சிறைபிடித்துள்ள 87 மீனவர்களை விரைவாக விடுவிக்க நடவடிக்கை: மத்திய அமைச்சருக்கு ஸ்டாலின் கடிதம் "175 படகுகளையும் விடுவிக்க வேண்டும்"

சென்னை, 24.ஜூலை 2024: தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திடக் கோரி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு நேற்று (23 ந் தேதி) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் 22.-7.-2024 அன்று மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், அவர்களும், அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் தற்போது ஜூலை 22 ம் நாள் வரை மட்டும் 250 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதைத் தெரிவித்துள்ள முதலமைச்சர், கடந்த 10 ஆண்டுகளில், ஒரு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மிக அதிகபட்ச எண்ணிக்கை இது என கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனவர்கள் இதுபோன்று அச்சுறுத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகள், கருவிகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து தடையின்றி நடைபெற்று வருவதாகவும், இதனால் மீனவ மக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த நிலைமையைத் தணித்திட உரிய தூதரக முயற்சிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்றும், பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து இலங்கையிலிருந்து 87 மீனவர்களையும், 175 படகுகளையும் விரைவாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.